திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.த.திருமால்

ந.க.8698/2019/பஅ3 நாள்:12.05.2022

பொருள்: பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை திருவண்ணாமலை மாவட்டம் – ஊராட்சிகளில் ஊராட்சி செயலர்களாகப் பணிபுரிந்து 2019–20–ம் ஆண்டு 20 சதவிகித காலிப்பணியிட இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணி மாறுதல் மூலம் இளநிலை உதவியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (MS) எண்.191, பொதுத்துறை நாள்.01.02.1962.
2. அரசாணை(2ப) எண்.54, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7) துறை நாள்.09.12.2021.
3. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.2780/சிடி–பஅ1/2021 நாள்:30.11.2021.
4. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.8698/2019/பஅ3 நாள்:10.01.2022.
5. தொடர்புடைய ஆவணங்கள்

*****

ஆணை:

திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், ஊராட்சிகளில் பணிபுரிந்த ஊராட்சி செயலர்களுக்கு 2019–20–ம் ஆண்டு 20 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் ஆக பணி மாறுதல் மூலம் பதவி உயர்வு வழங்கிட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1954–ஆம் ஆண்டு ஒழுங்குமுறை விதி 16(பி)ன் பிற்பகுதியின் கீழ் இசைவு அளித்ததன் அடிப்படையில் அரசின் முறையான அனுமதிபெற்று இளநிலை உதவியாளர்/ காசாளர்/ ஊர்நல அலுவலர் நிலை–2 ஆக கீழ்கண்ட நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கி பணிநியமனம் அளித்து உத்திரவிடப்பட்டது. இதன் அடிப்படையில் இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த தேதி விவரம் பின்வருமாறு அட்டவணையிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணிபுரிந்து வரும் அலுவலகம் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த தேதி | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்படும் தேதி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | மு.பாலசந்தர், ஊர்நல அலுவலர் நிலை–2, | ஊராட்சி ஒன்றியம், போளூர். | 13.01.2022 முற்பகல் | 13.01.2022 முற்பகல |
| 2 | கோ.ராஜகுமாரி, இளநிலை உதவியாளர், | ஊராட்சி ஒன்றியம், வெம்பாக்கம். | 10.01.2022 முற்பகல் | 10.01.2022 முற்பகல் |
| 3 | ஜி.பெருமாள், ஊர்நல அலுவலர் நிலை–2, | ஊராட்சி ஒன்றியம், தெள்ளார். | 10.01.2022 பிற்பகல் | 10.01.2022 பிற்பகல் |
| 4 | எம்.சம்பத், காசாளர், | ஊராட்சி ஒன்றியம், அனக்காவூர். | 11.01.2022 முற்பகல் | 11.01.2022 முற்பகல் |

மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் கலம் 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதியான பணியில் சேர்ந்த தேதி முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேற்படி தனியர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் இவர்களின் தகுதிகாண் பருவம் துவங்கும் மற்றும் இவர்களின் தகுதிகாண் பருவகாலம் தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் ஆகும்.

மேலும், இவர்கள் தகுதிகாண் பருவகாலத்திற்குள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்களுக்கான தேர்வுகள் மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் தவறாமல் தேர்ச்சி பெற வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர்(வளர்ச்சி),
திருவண்ணாமலை.

பெறுநர்.

சம்மந்தப்பட்ட பணியாளர்கள்

– உரிய வழிமுறையாக.

நகல்: சம்மந்தப்பட்ட அலுவலர்கள்

நகல்: “ பஅ3” இருப்பு கோப்பிற்கு

Block Development Officer (V.P.)
Vembakkam.